உ

சிவ சிவ

# முனிமொழி முப்பது

[குறிப்புரையுடன் கூடியது]

★

ஏவிளம்பி ஆண்டு விஜயதசமி

நினைவு மலர்

3—10—1957

★

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

# திருமுறை வெளியீடுகள்

| | ரூ. | ந. பை. |
|---|---|---|
| 1 விநாயகர் திருமுறை ... | 0 | 6 |
| 2 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... | 6 | 0 |
| 3 திருஞானசம்பந்தர் தேவாரம் ... | 2 | 50 |
| 4 திருநாவுக்கரசர் தேவாரம் ... | 2 | 25 |
| 5 சுந்தரர் தேவாரம் ... | 1 | 0 |
| 6 திருவாசகம் (புதிய வெளியீடு) ... | 0 | 60 |
| 7 திருக்கோவையார் ... | 2 | 0 |
| 8 ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா திருப்பல்லாண்டு ... | 0 | 56 |
| 9 திருமந்திரம் ... | 2 | 50 |
| 10 பதினோராந் திருமுறை ... | 1 | 25 |
| 11 பெரிய புராணம்—செய்யுள் ... | 2 | 50 |
| 12 பெரிய புராணம்—உரைநடை ... | 2 | 0 |
| 13 அகத்தியர் தேவாரத் திரட்டு ... | 0 | 3 |
| 14 திருவிளையாடற் புராணம்—செய்யுள் ... | 3 | [illegible] |
| 15 திருவிளையாடற் புராணம்—உரைநடை ... | 2 | 25 |
| 16 தாயுமானவர் சுவாமிகள் பாடல் ... | 1 | 25 |
| 17 கந்தபுராணச் சுருக்கம் ... | 1 | 7 |
| 18 கந்தபுராணம்—முதல் மூன்று காண்டங்கள் ... | 2 | 7 |
| 19 ,, யுத்த தேவகாண்டம் ... | 2 | |
| 20 ,, தக்ஷகாண்டம் ... | 1 | 5 |
| 21 கந்தபுராணம்—உரைநடை ... | 2 | 5 |
| 22 கந்தர் அலங்காரம்—குறிப்புரையுடன் ... | 0 | 2 |
| 23 கந்தரனுபூதி ... | 0 | 1 |
| 24 கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும் ... | 0 | |
| 25 கந்தர் கலிவெண்பா—மூலமும், உரையும் ... | 0 | [illegible] |

| | | ரூ. | ந.பை. |
|---|---|---|---|
| 26 | நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன் ... | 0 | 50 |
| 27 | சகலகலாவல்லிமாலை—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... | 0 | 6 |
| 28 | திருக்குறள்—அறத்துப்பால் ஹிந்தி மொழிபெயர்ப்பு ... | 1 | 50 |
| 29 | திருக்குறள்—பொருட்பால் ,, ... | 2 | 50 |
| 30 | திருக்குறள்-காமத்துப்பால் ,, ... | 1 | 0 |
| | டி 28, 29, 30 திருக்குறள் 3 புத்தகமும் சேர்த்து வாங்கினால் ... | 4 | 0 |
| 31 | திருக்குறள் தமிழ்மறை **K. M.** வேங்கடராமையா M. A., B. O. L. அவர்கள் குறிப்புரையுடன் ... | 0 | 75 |
| 32 | முதுமொழி மேல் வைப்பு ... | 0 | 75 |
| 33 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... | 1 | 25 |
| 34 | சிதம்பர மும்மணிக்கோவை—சிதம்பரச் செய்யுட்கோவை—தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 0 |
| 35 | பண்டார மும்மணிக்கோவை—காசிக் கலம்பகம்—சகலகலாவல்லி மாலை ... | 1 | 0 |
| 36 | அபிராமி பட்டர் பிரபந்தம் ... | 0 | 31 |
| 37 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 38 | திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் | 0 | 19 |

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :—

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**

**ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர்** B. A.,
**தியாகராச விலாஸ், 53, பிள்ளையார் கோவில் தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை-5.**

குறிப்பு :—டி விற்பனைத் தொகை '**குமரகுருபரன்**' பத்திரிகையைச் சாரும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

# முனிமொழி முப்பது

[குறிப்புரையுடன் கூடியது]

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களுடைய திருவுளப்பாங்கின்படி

★

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கம்
நிரந்தரத் தலைவர்
திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
அவர்களால் வெளியிடப்பெற்றது

ஏவிளம்பி ஆண்டு விசயதசமி

ஸ்ரீ காசிமடம் 1957 திருப்பனந்தாள்

உ

## சிவநாமப்பேறு

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்;
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்;
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்;
சிவசிவ என்னச் சிவகதி தானே.

—திருமந்திரம்.

# முன்னுரை

தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றும் அருந்தமிழ் குறிந்தே.

—தொல்காப்பியம்.

'முனிமொழி முப்பது' என்னும் இந்நூல் "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனி மொழியும்" என்னும் ஔவையார் பாடலில் வந்துள்ள 'முனிமொழி' என்ற நூலே என்பர். இதனை இயற்றிய வர் பெயர் முதலியன அறிய இயலவில்லை; ஆனால், அகத்திய முனிவரிடம் உபதேசம் பெற்ற ஒரு முனிவர் என்பது மட்டும் தெரிகின்றது. இந்நூல், தத்துவங்கள், ஆருதாரங்கள், மூன்று மண்டலங்கள், யோக நெறி, அட்டமாசித்தி முதலியவற்றைச் சுருக்கமாக அறிவிப் பது; எளிய நடையையும், நுண் பொருள்களையும் கொண்ட முப்பது ஆசிரிய விருத்தங்களை யுடையது; அந்தாதித்தொடை பெற்றது. இத்தகைய நூல் அன் பர்களுக்குப் பயன்படும் பொருட்டு **ஏவிளம்பி ஆண்டு விசயதசமி நினைவுமலராக** இந்நன்னாளில் **திருப்பனந் தாள் ஸ்ரீ காசிமடத்தின் இலவச வெளியீடாக** வெளி வருகின்றது.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** இதுவரை சைவசமய வளர்ச்சிக் கும் ஏனைப் பொதுநலன்களுக்கும் சுமார் 43 இலட்சம் ரூபாய்களுக்குமேல் அருட்கொடை வழங்கி, மேலும், நாளும் பற்பல அறங்களையும் ஆற்றிவருகின்றார்கள் என்பதை உலகம் நன்கு அறியும். அவர்கள் இச் சிறு

நூலின் நுட்பத்தை ஓர்ந்து, அன்பர்களுக்குப் பெரு நன்மை பயக்கும்படி, வெளியிடுதற்குத் திருவருள் தந்த கருணைக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

இந்நூல் அரசாங்கப் புத்தக நிலையத்திலுள்ள ஏட்டுப் பிரதியிலிருந்து எடுக்கப்பெற்று* அந் நிலையத்தாரால் வெளியிடப்பட்ட வெளியீட்டில், சிற்சில செய்யுட்கள் யாப்பமைதி செம்மையின்றி இருந்ததால் அவ்விடங்கள் சீர் அமைதி முதலியன நோக்கிச் செப்பம் செய்யப்பெற்றுள்ளன. **ஷை வெளியீட்டில் உள்ளவாறு மூலபாடங்கள் கீழ்க்குறிப்பாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.** குறிப்புரை ஒன்றும் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது. இந்நூலை வெளியிடுதற்கு இசைவுதந்த சென்னை அரசாங்க நூல்நிலையப் பாதுகாவலர் உயர் திரு. T. சந்திரசேகரன் M. A., L. T., அவர்கட்கும், அச்சுப்பிரதிகளைத் திருத்தி நன்முறையில் வெளிவர உதவிபுரிந்த திருமுறைக் கலைஞர் திருச்சி வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களுக்கு எனது நன்றி என்றும் உரியதாக.

இந்நூலைப் பதிப்பிக்குமாறு அடியவனைப் பணித்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பொன்னார் திருவடிகட்கு அடியவன் வணக்கம் என்றும் உரித்தாகும்.

ஸ்ரீவைகுண்டம்,
3-10-1957.

**T. M. குமரகுருபரன் பிள்ளை.**

---

*Madras Oriental Manuscripts Library Bulletin. Vol. IX. No. 1. Page 33-40.

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

# முனிமொழி முப்பது

காப்பு

**ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்**
**ஞானகுரு வாணியையுள் நாடு.**

## நூல்

ஆதரவு அதனால் வந்த
[1] அனுபவந் தன்னை முன்னோர்
ஓதிய பொருளால் மாந்தர்
உள்ளிருள் அகற்ற வேண்டிச்
சோதிசேர் [2] விளக்க மாகச்
சொல்லயான் தொடங்கு கின்றேன் ;
கோதிலா அமுதந் தந்த
குறுமுனி அருளைக் கொண்டே. 1

---

பாடபேதம்—1 **அனுபோகத் தீர்வை.** 2 **விளக்கதாகச்.**

1. ஆதரவு - அன்பு. உள்ளிருள் - மனத்திருள் ; அஞ்ஞானம். சோதிசேர் விளக்கம் - மிகத் தெளிவு ; யான் என்றது அகத்தியர் மாணவரில் ஒருவர். கோதிலா - குற்றமில்லாத. அமுதம் - இங்கு உயர் ஞானம். குறுமுனி - அகத்தியர்.

கொண்டனன் சென்னி மேலே
குறுமுனி இரண்டு பாதம்
கண்டனன் பொருளை உள்ளே
காயமே கோயி லாக
விண்டனன் [1]யானும் அந்த
மெய்யறி(வு) அறிந்து வேறு
உண்டென இல்லை என்றும்
[2]உணர்ந்தனன் தத்(து)வந் தானே. 2

தத்துவந் தொண்ணூற்(று) ஆறு
தக[3]விலா வாயுப் பத்து
மெத்தென நாடி பத்து
மெய்யுளே ஆரு தாரம்

---

பா-ம்—1 மானுடந்த. 2 உணர்வது. 3 வில்லா.

2. சென்னி-சிரம். பொருள்-இறைவன். காயம்-உடல். விண்டனன் - அறிவு மலரப் பெற்றனன். மெய்யறிவு - கடவுள். தத்துவம் - உண்மை. தான்-அசை. இங்குக் ''காயமே கோயிலாக'' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கும் உணரற்பாலது.

3. உள்நிலைக் கருவிகள் 36-ம். புறநிலைக் கருவிகள் 60-ம் ஆகத் தத்துவம் 96. வாயுப்பத்து - பிராணன் முதலிய தசவாயு. நாடி பத்து-இடைகலை முதலிய தச நாடிகள். ஆருதாரம் - மூலாதாரம், சுவாதிட்டானம்,

சுத்தமாங் கரணம் நான்கு
    தோன்றுமண் டலங்கள் மூன்று
இத்தனை அறிய வல்லார்
    இறைவராய் இருப்பர் தாமே. 3

இருகதி ராக நின்று
    இயங்கிய [1] பிராணன் தன்னை
வருவது போக்கும் [2] இன்றி
    மனத்தினல் மறித்து வைத்து
ஒருகதி ராகப் பார்க்கில்
    உண்மையாம் பொருள தாகும்
ஒருகதிர் மூலம் நாடி
    ஊடுபோய் மூழ்கி நின்றே. 4

மூலத்தே கருத்தை வைத்து
    மூண்டெழு கனலைத் தூண்ட

---

பா-ம்—1 பிராணந். 2 அன்றி.

மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை. கரணம் நான்கு-மனம், புத்தி, சித்தம், அகங்காரம். மண்டலம் மூன்று - சோம சூரியாக்கினி மண்டலம் மூன்று.

4. இரு கதிர் - இடைகலை, பிங்கலை; முறையே சந்திரகலை, சூரியகலை என்ற இரு சுவாசங்கள். ஒரு கதிர் - சுழிமுனை. நாடி - ஆராய்ந்து. ஊடு போய் - உள் நுழைந்து.

மேலைத்தூண் வழியே சென்று,
    விண்ணிலா மண்ட பத்தே
பாலைத்தான் நுகர்ந்து கொண்டு
    பழுதிலா அறிவி னாலே
காலைத்தான் நுகர வல்லார்
    காலனை வெல்லு வாரே. 5

காட்டிய மூலா தாரக்
    கனல்தனை எழுப்பிக் காலால்
மூட்டிய மேருத் தண்டின்
    முழுதுளை அதன்மேற் செல்ல
ஓட்டிய மேலை வாசல்
    ஒளிபெற நாடி யூடே
நீட்டியே குறைக்க வல்லார்
    நீள்தவம் புரிவார் தாமே. 6

---

5. மூலம் - மூலாதாரம். தூண் - பற்றுக்கோடு. இங்கு மூக்கு. நிலா மண்டபம் - சந்திரமண்டலம். பால் - அமிர்தம். கால் - காற்று, சுவாசம். காலன் - யமன்.

6. மூலாதாரக்கனல் - மூலாக்கினி; பிராணன் காலால் எழுப்பி - சுவாசத்தால் எழுப்பி. மேருத்தண்டு- மூக்கின் தண்டு. நீட்டியே குறைக்க - நீட்டவும் குறுக்கவும்.

தாங்கிய மூலா தாரந்
தன்னி(ல்)மூ வளைய மாகி
ஓங்கிமேல் நோக்கி நின்ற
ஒண்சுடர் அதனை உன்னி
ஆங்கதிர் தன்னைப் பற்றி
அறிவெனும் அறிவி னாலே
தூங்கியே இருக்க வல்லார்
சுகத்தையார் சொல்லு வாரே. 7

சொல்லன்றிப் பொருளும் அன்றிச்
சூழ்ந்ததோர் சொரூபம் அன்றி
அல்லன்றிப் பகலும் அன்றி
அகண்டபூ ரணமு மாகி
நல்லின்பச் சிவம தாகி
நாடிய பொருளி னூடே
செல்கின்ற சிந்தை யுள்ளார்
சித்தராய் வாழ்வர் தாமே. 8

---

7. மூவளையம் - மூன்று வட்டம். உன்னி-நினைத்து. ஆங்கதிர் - சுழிமுனை. தூங்கி - யோகநித்திரைசெய்து.

8. அல் - இரவு. பூரணம் - நிறைவு. அன்றி - இங்குக் கடந்து.

வானுளாம்[1] பொருளும் உள்ளாம்
மறையுளாம் பொருளும் உள்ளாம்
தானுமே பொருளாய் உள்ள
தற்பரந் தன்னை நோக்கிப்
போனநாள் புகுந்த[2] நாளாம்
பொய்யெலாம் மெய்யே ஆகும்
நானுளே கண்டு கொண்டேன்
நாதனுர் அறிவி னுலே. 9

அறிவினல் அறிவைப் பற்றி
அமைந்ததோர் சிந்தை தன்னைத்
[3]தறிப்புற மூலத் துள்ளாம்
தம்பத்தின் மேலே வைத்துக்
குறியாகப் பார்த்து மூன்று
கோணத்தின் மேலே நின்ற
நெறியாகத் தூண்டி ஏறில்
நின்மலன் அருள தாமே. 10

---

பா-ம்—1 வானுள்ளாம். 2 நாளம். 3 தெளிவுற.

9. வான் - ஆகாயம். மறை - வேதம். தற்பரம் - மேலான பொருள். நாதனுர் - இறைவன், குருநாதனுமாம். அறிவு - மெய்ஞ்ஞானம்.

10. தறிப்பு - நிலை; தம்பத்தின்மேல் - மூக்கு நுனியில்; நின்மலன் - இறைவன்; மூன்று கோணம் - மூலாதாரம்.

ஆம்பொருள் தானும் ஒன்றே
அறிவிலாப் பொருளும் ஒன்றே
போம்பொருள் தானும் ஒன்றே
புலன்களாம் பொருளும் ஒன்றே
பாம்பதின் வாயி லேறிப்
[1] பார்த்திடும் பொருளும் ஒன்றே
நாம்பல காலுஞ் சொன்னேம்
நல்லறி வாளர்க் கன்றே. 11

நன்னிலஞ் [2] சதுர நாலும்
[3] நாலிரு நாளில் சோமன்
வன்னியு மூன்று கோணம்
வாயுவும் ஆறு கோணம்
மின்னிய வெளியே வட்ட
மெய்யென்ப திதுவே யாகும்

---

பா-ம்—1 பார்க்கின்ற 2 சதிர. 3 நாவிரு.

11. ஆம், போம் - ஆகும், போகும். பாம்பு - இங்குச் சுவாசம்.

12. இச்செய்யுள் பஞ்ச பூதங்களின் வடிவைக் குறிப்பிட்டு அவற்றின் தோற்றம் ஒடுக்கங்களைக் கூறுகிறது. நன்னிலம்-பிருதுவி. சதுர நாலு-நாற்கோணம். நாலிருநாளில் சோமன் - அர்த்த சந்திரன்; இஃது அப்புவின் வடிவம். வன்னி - தேயு. வெளி - ஆகாயம்.

[1] தன்னுளே பிறந்து பின்னும்
[1] தன்னுளே ஒடுங்கும் தானே. 12

தாணுவாய் எழுந்த மேருத்
தன்னுளே பிறந்த சோதி
ஆணியாய் நின்று மேலே
அக்கினி வடிவு தோன்றும்
சேணியம் பிறந்த திங்கள்
செழுங்கதிர் உருவிக் கொன்றை
வேணியான் தானே ஆகும்
மெய்யினால் உணர்ந்து கொள்ளே. 13

உப்பிலே நாழி தன்னில்
உதகத்தை நாழி கூட்டித்
தப்பிலா நாழி யான
தன்மையா மாறு போல

---

பா-ம்—1 தன்னுள்ளே.

13. தாணு - தம்பம். ஆணி - முதன்மை. சேண் - தூரம், ஆகாயம். வேணியான் - சிவன்.

14. நாழி-ஓர் அளவு. ஒரு படி; உதகம்-தண்ணீர். விசாரம் - ஆராய்ச்சிப் பொருள். ஒருநாழி உப்பும் ஒரு நாழி நீரும் கூடினால் ஒருநாழியே ஆவதுபோல் இரண்டாய் நின்ற சத்தியும் சிவமும் ஒன்று கூடின் ஒன்றேயாம்.

மெய்ப்பொருள் சிவம தாகும்
விசாரமே சத்தி யாகும்
இப்பொருள் கூடி ஒன்று
இரண்டென இல்லை யாமே. 14

இல்லையாம் உண்டும் ஆகும்
யாவரும் அறியாப் போதஞ்
சொல்லவே எட்டா தாகும்
தூரவே போக்கும் இல்லை;
நல்லவர் சிந்தை யுள்ளே
நாடினல் [1] எளிய தாகும்
வல்லவர் கண்டு கொள்ளீர்
மாயையின் கண்ணை விட்டே. 15

கண்ணுளே ஒளிய தாகும்
கருத்துளே அறிவ தாகும்
உண்ணிலோங் காரந் [2] தன்னில்
உட்பொருள் தானய் நிற்கும்

---

பா-ம்—1 வெளிய. 2 உன்னிலோங்காரத்து.

15. போதம் - அறிவு. மாயை - அறியாமை.

16. உண்ணில் - உன்னில்—நினைத்தால். ஓங்காரம்-பிரணவம். உழலுதல் - வருந்துதல்.

எண்ணிலாப் பிறவி யூடே
இருக்கும தறிய மாட்டீர்
வெண்ணெயைப் பிடித்து நெய்க்கு
வீணிலே உழலு வீரே. 16

உந்தியின் கீழே அவ்வும்
உவ்வுமாய் ஒளிசி றந்து
விந்துவாய் நாத மாகி
விளங்கிய சோதி தன்னைச்
சிந்தையில் உறவே நோக்கிச்
செயலழிந் திருப்பீ ராகில்
வந்ததோர் சிவமுள் ளாகும்
வடிவிலா வடிவைக் கொண்டே. 17

வரவில்லை போக்கும் இல்லை;
வாழ்வில்லை முடிவும் இல்லை;
இரவில்லை பகலும் இல்லை;
யாவையுந் தானாய் நிற்கும்;

---

17. அவ்வும் - அகரமும்; உவ்வும்-உகரமும்; இந்த இரண்டும் கூடியது சத்தியும் சிவமும். விந்து நாதம் - சிவம் சக்தி. செயலழிந்து - செயலற்று. வடிவிலா வடிவு - அருஉரு.

18. இரவு பகல் - சகலாவஸ்தை, கேவலாவஸ்தை. கரவு - மறைவு.

கிரவில்லை மகிழ்ச்சி இல்லை ;
கண்டபின் காணா இன்பம்
தரவல்ல பொருளே ஆகும்
தற்பரம் உணருங் காலே. 18

* தற்பரந் தானே தென்னில்
சதாசிவந் தானாய் நிற்கும் ;
... ... ... ... ... ...
நிற்கின்ற சிவமே தென்னில்
நின்மல வடிவாய் நிற்கும் ;
கற்கின்ற அறிவி னாலே
காணலாங் காட்டொ ணாதே. 19

காண்பது தன்னைத் தானே
காட்டுமெய் பொருளுந் தானே
ஆண்பெணாய் அலியு மாகி
அனைத்துள பொருளுந் தானே

---

* இப்பாடலின் இரண்டாமடி சிதைந்துவிட்டது.

19. காணலாம் காட்டொணாது - தானே கண்டுணர வேண்டுமேயன்றிப் பிறர்க்குக் காட்ட இயலாது. சதாசிவம் - சதாசிவ மூர்த்தி.

20. சேண் - ஆகாயம். ஏண் - வலிமை.

சேண்பயில் ஒளிய தாகித்
தெளிவதும் உள்ளத் துள்ளே
[1]ஏண்பயில் சோதி யானை
[2]எண்ணுவர் நெஞ்சி னுள்ளே. 20

நெஞ்சிலே நினைவு தோன்றும்
நினைவிலே அறிவு தோன்றும்
மிஞ்சினால் அறிவு தானே
மெய்ப்பொருள் தானாய் நிற்கும்
பஞ்சிலே [3]படுதீப் போலப்
பரத்துளே துரிய மாகும்
அஞ்சிலே அதீத மானால்
அதனுளே ஆதி யாமே. 21

ஆதியும் அநாதி ஆகும்
அறிவெனும் அறிவும் ஆகும்

---

பா-ம்—1 உண்பயில். 2 உணருவர். 3 படும் பொறிப் போலப்.

21. மிஞ்சினால் - மிகுந்தால். மெய்ப்பொருள் - மெய்ஞ்ஞானம். துரியம் - தன்மயமாய் நிற்பது. அதீதம் - கடந்தது.

22. அநாதி - பழமை. நாதியாம்-ஒலித்தலாகிய. நாட்டம் - நோக்கு; சொன்னம் - சுவர்ணம்.

சோதியாஞ் சோதி ஆகும்
தோன்றிய வெளியும் ஆகும்
நாதியாம் நாதம் ஆகும்
நாட்டமுங் காண லாகும்
மேதினி விளங்க வாழ்வோர்
மேனியுஞ் சொன்ன மாமே. 22.

சொன்னநன் மூலா தாரஞ்
சுருளையின் மேரு பற்றி
வன்னியை எழுப்பிக் காலால்
மனம்வைத்தோ ராண்டு நோக்கில்
பொன்னன்ன வடிவ தாகும்
புகழ்ந்திடும் அணுவும் ஆகும்
அன்னத்தின் [1]நொய்ய தாகும்
அட்டமா சித்தி யாகும். 23

சித்திர நாடி யூடே
[2]தெளிவுறும் அநிர மோடிக்

பா-ம்—1 நொய்யனுரும். 2 தெளிவுறு மனிர.

23. சுருளை - வட்டம். வன்னி - மூலாக்கினி- ஆண்டு - ஆங்கே. அணு - சிறிய உரு. அட்டமாசித்தி. அணிமா முதலிய எட்டுச் சித்திகள்.

குத்திர மாய்கை நீக்கிக்
[1] குறையறக் கொள்ளு மாகில்
நத்திர முனிவர் தேவர்
நாடியுந் தேடிக் காணாச்
சித்திரக் கூத்தாய் நின்ற
திருவடி காண லாமே. 24

கண்டெழுத் தொன்று தன்னைக்
கனலெழுத் தஞ்சு பத்தை
மொண்டெழுத் தெடுத்துக் கொண்டு
முயங்கியே மயங்கு வீராய்
கண்டெழுத் திரண்டு தன்னைக்
[2] கணிப்புறத் தந்த போது
சென்டெழுத் துணர்ந்து தோன்றும்
திருவடி சேர லாமே. 25

---

பா-ம்—1 வள்ளியைக். 2 குறிப்புறத்.

24. அநீரம் - நீர்மையற்றது. குத்திரம்-வஞ்சகம். மாய்கை - மாயை. நத்திரம் - நற்றிறம், நன்மை. தேவர்-பிரம விட்டுணு முதலியோர். சித்திரம் - அழகு. கூத்து-ஆனந்தத்தாண்டவம்.

25. முதலடி 51 அட்சரத்தைக் குறித்தது. எழுத் திரண்டு - சிவ.

மெழுகுறு உருவுக் குள்ளே
[1]மெய்யுருத் தோன்று மாபோல்
அழிவதோர் வடிவி னுள்ளே
அழிவிலா வடிவு தோன்றும்
கழிவதோர் காலம் இல்லை
கண்டதே கண்டி ருந்தால்
முழுதுமாம் உலகுக் கெல்லாம்
மூலமா மேனி யாமே. 26

மூலமா மேனி யாகும்
முடிவதோர் முடிவும் இல்லை
காலமுங் கழிந்து போகுங்
காயமுஞ் சித்தி யாகும்
கோலமும் நினைந்த வண்ணம்
கொண்டதோர் வடிவு மாகும்
சீலமும் நோன்பும் இல்லை
செனனமுந் தீருந் தானே. 27

---

பா-ம்—1 வெற்றுருத் தோன்றுமாப்போல்.

26. மெழுகுறு உருவு - பதுமை அமைக்கக்கொள்ளும் கரு.

27. காயம் - உடல். சித்தி - உரம். கோலம் - வடிவு. சீலம் - ஒழுக்கம்.

[1] தீய்ந்திடுஞ் செனனம் ஏழும்
　　செய்யிரு வினையும் இல்லை
காய்ந்திரும் புண்ட நீரைக்
　　காணெனச் சுவரு நிற்கும்
மாய்ந்தநீர் [2] மண்ணும் காலும்
　　வன்னியும் ஒன்றி நேரே
ஆய்ந்துகொண் டிருப்பீர் ஆகில்
　　ஆரியன் [3] அடியி னுக்கே. 28

இக்குடன் [4] ரசமும் போன்றும்
　　எள்ளுடன் எண்ணெய் போன்றும்
மிக்கபூ மணமும் போன்றும்
　　விளக்குடன் ஒளியும் போன்றும்

---

பா-ம்—1 தீர்ந்திடுஞ். 2 மனமும். 3 அடியிணைக்கே. 4. ரசம்.

28. தீய்ந்திடும் - அழியும். இருவினை - நல்வினை, தீவினை, காய்ந்து - நெருப்பில் காய்ந்த: இங்கு அகரம் தொகுத்தல். இங்கு உண்ணுதல் - மறைதல். சுவரு நிற்கும் - சுவறும். ஆரியன் - பூசிக்கத் தக்கவன், இறைவன்.

29. இக்கு - கரும்பு. தொக்கு - தோல். பரிசம் - ஸ்பரிச உணர்ச்சி; இங்கு "விறகில் தீயினன்" என்ற அப்பர் சுவாமிகள் வாக்கு நோக்கற்பாலது. இங்குக் கூறும் உவமைகள் இரண்டறக் கலத்தலுக்குக் காட்டியவை.

தொக்குடன் பரிசம் போன்றும்
துடிப்பொடு சத்தம் போன்றும்
அக்கினிக் கண்ணன் ஈசன்
அருளினைப் பெறுவர் தாமே. 29

அருளுயிர் அடைவே தென்னில்
ஆவிநெய் திரியும் அற்றால்
தெருளுறு ஒளிய டைந்த
செய்தியே போல தாகும்
மருளுறு மலங்கள் அற்றால்
மன்னுயிர் பரத்தில் எய்தும்
பொருளுற வைத்(து)அ டிக்கீழ்ப்
போற்றுமா தரவி னாலே. 30

முனிமொழி முப்பது
முற்றிற்று

---

30. அடைவு - அடைதல். பரத்தைச் சார்தல். அடைந்த - மறைந்த. மருள் - மயக்கம். மலம் - மும்மலம்.

உ

சிவ சிவ

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க;
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக; உலக மெல்லாம்.

—கந்தபுராணம்

உ
சிவசிவ

# கந்தர் அநுபூதி

முருகன் குமரன் குகன்என் றுமொழிந்து
உருகும் செயல்தந் துணர்வுஎன் றருள்வாய்;
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவ!எண் குணபஞ் சரனே.

நாதா குமரா நமஎன் றரனார்
ஓதா எனவோ தியது)எப் பொருள்தான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா! குறமின் பதசே கரனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்கள் நிறுவிய தருமங்கள்

---

| | | முதற் பொருள் ரூபா |
|---|---|---|
| 1. திருமுறை வளர்ச்சிக்கு ஆக 27 தருமங்கள் | ... | 4,06,000 |
| 2. கல்வி அபிவிருத்திக்கு ஆக 48 தருமங்கள் | ... | 6,04,200 |
| 3. சைவசித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள் | ... | 1,56,000 |
| 4. அன்னதானம் செய்ய 101 தருமங்கள் | ... | 24,17,500 |
| 5. வைத்தியம் செய்ய 5 தருமங்கள் | ... | 1,22,500 |
| 6. பொது தருமங்கள்—ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலிய 57 தருமங்கள் | ... | 5,29,245 |
| ஆகத் தருமங்கள் 245-க்கு | ரூ. | 42,35,445 |

---

## விரைவில் வெளிவருகின்றது !

# திருக்குறள் - உரைக்கொத்து

## அறத்துப்பால்

திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மருள்
நமக்குக் கிடைத்துள்ள ஆசிரியர்களது
உரைகளும், ஆங்கில மொழி
பெயர்ப்பும் கொண்டு அடக்க
விலைக்கு வெளிவர
இருக்கின்றது.

பொருட்பாலும், காமத்துப்பாலும்
இவ்வாறே தொடர்ந்து வெளியிடப்பெறும்.

**ஸ்ரீ காசிமடம் ❀ திருப்பனந்தாள்**

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—57.